# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

## OS.No.6/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. முருகன் **Pw1** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 3rd day of June 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். அத்துடன் 4 ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை 1) கடந்த 22.07.2018ம் தேதி வாதியிடமிருந்து இறந்துபோன சாலமோன் தேவஊவு ரூ.8,00,000/- ரொக்கம் கடனாக பெற்றுக்கொண்டு வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுத்த காசோலை எண்.552501ன் அசல் வா.சா.ஆ. 1 ஆகும். 2) கடந்த 25.10.2021ம் தேதி வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் ரசீதுடன் கூடியது வா.சா.ஆ. 2 ஆகும். 3) கடந்த

30.10.2021ம் தேதி மேற்படி அறிவிப்பை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல் எண்ணம் 1 வா.சா.ஆ. 3 ஆகும். 4) 06.11.2021ம் தேதி மேற்படி அறிவிப்பை 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வாங்காமல் தவிர்த்து திரும்ப வந்த கவர் அசல் எண்ணம் – 2 வா.சா.ஆ. 4 வரிசை ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்குவிசாரணை இன்று இல்லை.**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi